**பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இலங்கை கணக்காளர் சேவையின் தரம் I இன் பிரதான கணக்காளர் பதவி**

மேற்படி பதவிக்கு நியமனம் செய்வதற்காக இலங்கை கணக்காளர் சேவையின் தரம் I இல் தகுதியுடைய உத்தியோகத்தர்களிடமிருந்து ( விண்ணப்பங்கள் கோரும் இறுதித் திகதிக்கு தரம் I இற்கு தரமுயர்த்த தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளவர்கள் உள்ளடங்கலாக) விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வெற்றிடங்களின் எண்ணிக்கை 09 ஆகும்.

கணக்காளர் சேவையின் தரம் I இல் விண்ணப்பதாரிகள் இல்லாத சந்தர்ப்பத்தில் 03 வருட செயலூக்கமானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தையுடைய குறித்த சேவையின் தரம் II இல் உள்ள உத்தியோகத்தர்களை பதவியில் முழு நேர அடிப்படையில கடமையாற்ற நியமிக்கப்படுவார்கள் என கவனத்திற் கொள்ளப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை ஒழுங்கு விதி 135 இன் ஏற்பாடுகளுக்கு கட்டுப்பட்டு பின்னர் தொடர்ந்தும் நீடிக்க முடியுமான வகையில் கடமையை நிறைவேற்றுவதற்கான நியமனங்கள் அதிகபட்சம் ஒரு வருட காலத்திற்கு மேற்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரிகளால் இங்கு இணைத்து அனுப்பப்படும் மாதிரிப் படிவத்தைப் பயன்படுத்தி உரியவாறு பூரணப்படுத்திய சுயவிபரத் தகவல்களை 2023.07.10 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கப்பெறும் வகையில் செயலாளர், பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள்,மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு, "நில மெதுர", எல்விடிகல மாவத்தை, நாரஹேன்பிடி, கொழும்பு 05 என்ற முகவரிக்கு தமது திணைக்களத் தலைவர் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

காலதாமதமாக கிடைக்கப்பெறும், முழுமை பெறாத விண்ணப்பங்கள் மற்றும் உரிய படிவத்தின் மூலம் சமர்ப்பிக்கப்படாத விண்ணப்பங்கள் எந்தவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

2.0. தனிப்பட்ட தகவல்கள் :

2.1. அனுபவம் மற்றும் தொழிற் தகைமைகள் :

i. இலங்கை கணக்காளர் சேவையின் தரம் I இல் குறைந்தபட்சம் 03 வருட அனுபவம் இருத்தல் மிகவும் ஏற்றத்தக்கது.
ii. இலங்கை கணக்காளர் சேவைப் பிரமாணத்தின் ( இங்கு இதன்பிறகு " சேவைப் பிரமாணம்" என அழைக்கப்படும்) 05 ஆம் பின்னிணைப்பில் குறிப்பாக காட்டப்பட்டுள்ள எந்தவொரு துறையிலும் பட்டப்பின் பட்டம் / தொழில்முறைத் தகைமை
iii. ஆங்கில மொழித் தேர்ச்சி

2.2. ஆற்றல்கள்

i. குழு ரீதியான தலைவராயிருத்தல்

ii. கோளாறுகளை நிவர்த்தி செய்பவராக இருத்தல்

iii. உறுதிப்பாடு

2.3. நடத்தைத் திறன்

i. தலைமைத்துவம்

ii. கூட்டாக வேலை செய்தல்

iii. தொடர்பாடல் திறன்

3.0. தேர்ந்தெடுக்கும் முறை :

சுயவிபரத் தகவல் மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் சேவை மூப்புநிலை மற்றும் தகுதி மதிப்பீட்டின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள். நேர்முகப் பரீட்சைக்காக குறுகிய பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கையினர் மாத்திரம் அழைக்கப்படுவார்கள். விண்ணப்பங்களை குறுகிய பட்டியலிடளிற்கான தேர்வளவுகளுக்கு தயவுடன் 2022.09.15 ஆந் திகதிய அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை 02/2022 இன் 6(ஆ) பிரிவினைப் பார்க்கவும்.

3.1 புள்ளி வழங்கும் நடைமுறை

| தலைப்பு | அதிகபட்ச புள்ளிகள் | மதிப்பீட்டு முறை |
|---|---|---|
| **சேவை மூப்புநிலை**<br>சேவைமூப்பு நிலை கூடிய விண்ணப்பதாரிக்கு அதிகபட்ச புள்ளி வழங்கப்படும்.<br>அதன் விகிதாசார அடிப்படையில் மற்றைய விண்ணப்பதாரிகளுக்கு சேவை மூப்புநிலைக்கான புள்ளிகள் வழங்கப்படும். | | சுயவிபரத் தகவல்கள் : |
| இலங்கை கணக்காளர் சேவையின் தரம் I இல் அனுபவம் ** துறையில் சேவைக் காலம்/விடயத்துக்கான வெளிப்படுத்துகை தவிர, மேற்கூறிய துறைகளில் ஈடுபாடு காட்டுதல் அல்லது செயற்படுதல் மூலம் பெறப்பட்ட அறிவின் ஆழம் அல்லது நிபுணத்துவம் இங்கு மதிப்பிடப்படுகிறது. | | |
| **தொழிற் தகைமைகள்**<br>**(1)**.சேவைப் பிரமாணத்தின் 05 ஆம் பின்னிணைப்பில் காட்டப்பட்டுள்ள எந்தவொரு துறையிலும் பட்டப் பின் பட்டம் / தொழிற் தகைமைகள் | | |

| | | |
|---|---|---|
| அ. ஆராய்ச்சி அடிப்படையிலான பட்டப் பின் பட்டம் - 7 புள்ளிகள்<br>ஆ. கல்வி பட்டப்பின் பட்டம் / சேவைப் பிரமாணத்தின் பின்னிணைப்பு 5.1 இல் குறிப்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள எந்தவொரு தொழில்சார் நிறுவனமொன்றில் உறுப்புரிமை - 6 புள்ளிகள்<br>இ. பட்டப் பின் பட்ட டிப்ளோமா - 5 புள்ளிகள்<br>ஈ. பட்டம் / பட்டப் பின் பட்ட சான்றிதழ் பத்திரம் - 4 புள்ளிகள்<br>உ. டிப்ளோமா - 3 புள்ளிகள்<br>(2) நிதி முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி (அதிகபட்சம் 1.0 புள்ளி வரை)<br>அ. 3 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு - 1 புள்ளி<br>ஆ. 10 நாட்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு - 0.5 புள்ளி<br>இ. 03 நாட்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு - 0.2 புள்ளி<br><br>(3) ஆங்கில மொழித் தேர்ச்சி*<br>அ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது அரச பயிற்சி நிறுவனமொன்றிலிருந்து பெற்ற ஆங்கில டிப்ளோமா /IELTS கல்வி மொத்தப் புள்ளி 6.5 அல்லது அதற்கு மேற்பட்ட, TOEFL-IBT 79 அல்லது மேற்படி, TOEFL-CBT 213 அல்லது அதற்கு மேற்பட்ட, அல்லது TOEFL-PBT 550அல்லது அதற்கு மேற்பட்ட- புள்ளி 02<br>ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது அரசாங்க பயிற்சி நிறுவனமொன்றிலிருந்து ஆங்கில மொழி தொடர்பாக பெற்ற சான்றிதழ் - 01* புள்ளி உயர் தகுதிகளுக்கு மாத்திரமே வழங்கப்படுகிறது. | | |
| ஆற்றல்கள்**<br>மேற்படி 2.2 இல் காட்டப்பட்டுள்ளவாறு விண்ணப்பதாரிகளின் செயலார்வத்தின் படி பணிகளை பயனுறுதி மிக்கதாக நிறைவேற்றப்படுதல் வேண்டும். | | நேர்முகப் பரீட்சை |
| நடத்தைத் திறன்** | | |

| | | |
|---|---|---|
| மேற்படி 2.3 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ளவாறு பயனுறுதி மிக்கதாக மேற்கொள்ள அவசியப்படும் செயல்களும் செயற்பாடுகளும். | | |
| வினா மாதிரிகள் மற்றும் தர நிர்ணய அளவுகளுக்கு தயவுடன் அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் 02/2022 இன் இணைப்பு II ஐப் பார்க்கவும். | | |

குறிப்பு 1: மேற்படி புள்ளி வழங்கும் நடைமுறையில் "அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்" என்பதனால் கருதப்படுவது, இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமாகும்.

குறிப்பு 2 : மேற்படி புள்ளி வழங்கும் நடைமுறையில் காட்டப்பட்டுள்ள சகல பட்டப்பின் பட்டம் / தொழில்சார் தகைமைகள்;

i. இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது (பிற பட்டம் வழங்கும் நிறுவனமொன்றிலிருந்து பெற்ற அவ்வாறானதொரு தகைமைக்கு இந்த ஆணைக்குழுவிடம் அங்கீகாரம் இருத்தல் வேண்டும்) அல்லது

ii. அரசாங்க பயிற்சி நிறுவனமொன்றிலிருந்து அல்லது அரசின் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுக் கல்வி நிறுவனத்திலிருந்து பெற்றிருத்தல் வேண்டும் ;

ஒப்பம் – கே.டி.என்.ரஞ்சித் அசோக

செயலாளர்

பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்,
மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி
அமைச்சு

கே.ஜீ.தர்மதிலக்க

மேலதிக செயலாளர் ( உள்நாட்டலுவல்கள் பிரிவு)

2023.06.22